*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 83/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW- 4 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.தங்கதுரை த/பெ. சேகர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.07.2026.**

துவக்க நேரம் 11.16 F.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது நாகியம்பட்டியில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நாகியம்பட்டியில் உள்ள அம்பேத்கர் காலணியில் சம்பவம் நடந்து முடிந்த பிறகு நான் சம்பவயிடத்திற்கு வந்தேன்.

2) அப்பொழுது அங்கு இருந்த போலிசார் இருந்தார்கள். சம்பவடயிடத்தை படம் வரைந்து, எழுதிக்கொண்டதற்கு சாட்சியாக இருக்கச்சொல்லி என்னை கேட்டுக்கொண்டார்கள். நானும், போலிசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்து முடிந்த பிறகு சம்பவயிடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 11.00 மணிக்கு மேல் சென்றேன், சரியாக நேரம்

தெரியவில்லை. நான், போலிசாரிடம் இந்த இடத்தில் தான் சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எந்த இடத்தில் சம்பவம் நடந்தது, எப்படி சம்பவம் நடந்தது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

2) நான் கையெழுத்து போட்ட பிறகு போலிசார், என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் அந்த இடத்தில் கையொப்பம் மட்டும்தான் போட்டேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம், போலிசார் தோராயமாக 3, 4 கையெழுத்துகள் வாங்கியிருப்பார்களா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

3) நான் சம்பவயிடத்திற்கு சென்றபொழுது அந்த இடத்தில் கும்பல் அதிகமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். முருகேசன் எனது சமூகத்தை சேர்ந்தவரா என்றால் ஆமாம், எனது துாரத்து சொந்தம். சம்பவம் எப்படி நடந்தது, எவ்வாறு நடந்தது என்று தெரியாத நிலையில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, முருகேசன், எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 11.25 F.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.02 17:33:03 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 83/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-7)***

*Name / Father's Name:* ***திரு.பாலு த/பெ. ராஜாங்கம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.07.2026.**

துவக்க நேரம் 11.26 F.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது நாகியம்பட்டியில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சம்பவத்தன்று நான், பால் எடுத்துக்கொண்டு தளவாய்பட்டிக்கு சென்றிருந்தபொழுது எனக்கு போன் மூலமாக சம்பவம் நடந்ததாக தகவல் வந்தது. அதன் பின்னிட்டு நான், நாகியம்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு வந்தபொழுது, போலிசார் எனது வீட்டிற்கு வந்து ஒரு கையெழுத்து போடச்சொல்லி வாங்கிச்சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கும், சம்பவயிடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 15 அடி தூரம் இருக்கும். முருகேசன், எனது உறவினரா என்றால்

எனது மாமா ஆவார். சம்பவம் எப்படி நடந்தது, எவ்வாறு நடந்தது என்று தெரியாத நிலையில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, முருகேசன், எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 11.32 F.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.02 17:33:11 +0530

Judicial Magistrate No.2, Attur.